# கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஆத்தூர்.

முன்னிலை : **திருமதி. D. ஜான்சிராணி MBA., LLM.,**
**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**ஆத்தூர்.**

2025–ஆம் ஆண்டு, ஜுன் திங்கள், 30–ஆம் நாள், திங்கட்கிழமை

**இ.ம.எண். 9/2025 இன் அ.வ.எண்.36/2003**

**CNR No. TNSA13-000046-2003**

செல்லம்மாள்
பொது அதிகாரம் பெற்ற முகவர்
V.அங்கமுத்து . . . மனுதாரர்/வாதி

/எதிராக/

1. வள்ளி
2. பொன்னுசாமி
3. ஆறுமுகம்
4. சின்னுகவுண்டர் . . . எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவின் மீதான விசாரணையானது, 27.06.2025–ஆம் தேதியில் இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதியாக வந்தபோது, மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.M.N.நடேஷ் அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.S.சிவக்குமார் அவர்கள் ஆஜராகியும், 2ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.M.காமராஜ் அவர்கள் ஆஜராகியும், 3, 4 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் நீதிமன்றத்தில் ஆஜரின்மையால் தோன்றாதரப்பினராக்கப்பட்டும், இருதரப்பிலும் எடுத்துரைத்த வாதுரைகளைக் கேட்டும், இரு தரப்பு ஆவணங்களை பரிசீலித்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

## உத்தரவு

மனுதாரர்/வாதி இம்மனுவை சேலம் மாவட்ட ஆட்சியரோ அல்லது அவரது

அதிகாரம் பெற்ற அலுவலரோ இராமநாயக்கன்பாளையம் நிலக்குடியேற்ற கூட்டுறவு சங்கம் சம்மந்தப்பட்டதும், அழைப்பாணையில் கோரப்பட்டுள்ளதுமான ஆவணங்களுடன் ஆஜராக அழைப்பாணை அனுப்பவும் அவரை வாதி தரப்பு சாட்சியாக விசாரணை செய்ய உரிய அனுமதி வேண்டி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 16 பிரிவு 1(2) மற்றும் பிரிவு 151 ன் கீழ் தாக்கல் செய்துள்ளார்.

2. <u>மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம் :</u>

மனுதாரர் இம்மனுவில் மனுதாரரும் மேற்படி வழக்கில் வாதியின் பொது அதிகாரம் பெற்ற முகவர் என்றும், சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம், இராமநாயக்கன்பாளையம் கிராமத்தில் நிலக்குடியேற்ற கூட்டுறவு சங்கம் 1959 வாக்கில் துவங்கப்பட்டது என்றும், அச்சங்கத்தில் இணைந்த 66 உறுப்பினர்களுக்கு தலா 7–1/2 ஏக்கர் நிலமும், சர்வே எண்.73/7 ல் உள்ள கிணற்றில் பாதி பாகமும் மேற்படி சங்க உறுப்பினர் எண்.61 T.அங்கமுத்து என்பவருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றும், மேற்படி சங்கம் 1988–ல் களைக்கப்பட்டதால் சங்க உறுப்பினர்களிடம் ஒப்படைக்கப்பட்ட நிலங்களுக்கு உறுப்பினர்கள் (அ) அவர்களது வாரிசுகளுக்கு அடமானம் வழங்க உத்திரவு பகரப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

மேலும் மேற்படி நிலங்கள் சம்பந்தமாக O.S.36/2003–ல் வழக்கு நடைபெற்று வருவதால் மேற்படி கூட்டுறவு சங்க சம்பந்தப்பட்ட சான்றாவணங்களுடன் துணைப்பதிவாளர் கூட்டுறவு சங்கங்கங்கள் அவர்கள், ஆத்தூர் சரகம், கூட்ரோடு, வினாயகபுரம், நரசிங்கபுரம் அஞ்சல் – 636 108, ஆத்தூர் வட்டம், சேலம் மாவட்டம் அவர்களை நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியம் அளிக்க சம்மன் வழங்கப்பட்டது என்றும், அவர் கடந்த 16.04.2025–ல் நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியம் அளித்தபோது வாதி கோரிய சான்றாவணங்கள் அனைத்தும் சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்க அனுப்பி விட்டதாக சாட்சியம் அளித்துள்ளதாகவும், தாவா சொத்துக்களில் மனுதாரரின் மனைவிக்கு 1/3 பாகம் உரிமையானது என்றும், மனுதாரர் அரசு பணியில் இருந்து வந்ததால் அவரது மனைவி வாதி செல்லம்மாள்

பெயருக்கு அவரது 1/3 பாகத்திற்கு அடமானம் பெற இயலவில்லை என்றும், அதனால் 1, 2 பிரதிவாதிகள் பெயரில் தாவா சொத்துக்களைப் பொறுத்து கூட்டுக்குடும்ப நன்மைக்காக அடமானம் பெற முடிவு செய்யப்பட்டு அடமானம் பெறப்பட்டுள்ளது என்றும், தாவா சொத்துக்கள் வாதி மற்றும் 1, 2 பிரதிவாதிகளின் கூட்டு அனுபவத்திலேயே இருந்து வருகிறது என்றும் கூறியுள்ளார்.

நிலக்குடியேற்ற சங்கம் சம்பந்தப்பட்ட ஆவணங்கள் மேற்படி வழக்கிற்கு இன்றியமையாதவை என்றும், வாதியின் தந்தை T.அங்கமுத்து மேற்படி சங்கத்தின் உறுப்பினர் என்பதையும் அவருக்கு மேற்படி சங்கத்தின் மூலம் தாவா சொத்து ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதையும் மேற்படி சங்கம் களைக்கப்பட்டது என்பதையும், அதன்பிறகு தாவா நிலங்கள் தரிசாக்கப்பட்டது என்பதையும், ஆனால் தாவா நிலங்கள் தொடர்ந்து கூட்டுக்குடும்ப அனுபோகத்தில் இருந்து வந்தது என்பதையும், மேற்கண்ட சூழ்நிலையில் தாவா சொத்திற்கு 1, 2 பிரதிவாதிகள் பெயரில் கூட்டுக்குடும்ப நன்மைக்காக அடமானம் பெறப்பட்டது என்பதையும் நிரூபணம் செய்யும் பொறுப்பு வாதியை சேர்ந்தது என்றும், எனவே சேலம் ஆட்சியருக்கு அழைப்பாணை அனுப்பி அவரது அதிகாரம் பெற்ற அலுவலர் ஆவணங்களுடன் ஆஜராகுமாறு உத்தரவிட வேண்டி மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

3. <u>1ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்:</u>

இம்மனுவில் குறிப்பிட்டுள்ள சங்கதிகளில் 1ம் எதிர்மனுதாரர் வெளிப்படையாக ஒப்புக்கொண்டுள்ள சங்கதிகளை தவிர மற்றவற்றை மறுக்கிறார். மேலும் வாதி தரப்பில் வாதி மற்றும் அவரது சார்பாக சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அதன் பின்னிட்டு நிலகுடியேற்ற சங்க துணை பதிவாளரை வாதியின் தரப்பு சாட்சியாக வா.சா.4 ஆக விசாரிக்கப்பட்டு அவர் தெளிவாக அவரது சாட்சியத்தின் மூலம் மேற்படி நிலகுடியேற்ற சங்கம் கலைக்கப்பட்டுவிட்டது என்று சாட்சியம் அளித்துள்ளார். மேலும் மேற்படி வழக்கினை வாதி பாகப்பிரிவினை கோரி தாக்கல் செய்துள்ளதாகவும், அதற்காக மாவட்ட ஆட்சியரை விசாரணை செய்ய வேண்டிய அவசியம் இல்லை எனவும், மேற்படி சொத்து வாதி மற்றும் 1, 2 பிரதிவாதிகளின் தகப்பனார் அங்கமுத்து என்பவருக்கு நிலகுடியேற்ற சங்கத்தின் மூலம் ஒப்படைக்கப்பட்டு பின்

தரிசாக்கப்பட்டது என்று ஏற்கனவே தெளிவாக சாட்சியம் அளித்துள்ளதாகவும், இந்நிலையில் மனுதாரர் மேற்படி வழக்கினை காலம் கடத்தும் நோக்கத்திலும், இந்த எதிர்மனுதாரரை அலைகழிக்க வேண்டுமென்ற கெட்ட எண்ணத்திலும் இம்மனுவை தாக்கல் செய்துள்ளதால் இம்மனுவானது தள்ளுபடி செய்யத்தக்கது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் வா.சா.4 சாட்சியான ஆத்தூர் சரக கூட்டுறவு சங்கங்களின் துணைபதிவாளரான ரவிசங்கர் அவரது முதன்மை சாட்சியத்தில் தெளிவாக மேற்படி சங்கம் தொடர்பான மற்ற ஆவணங்கள் அவரது அலுவலகத்தில் கிடைக்கப்பெறவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளதாகவும், இந்நிலையில் மேற்படி சங்கம் சம்மந்தமாக எவ்வித ஆவணங்களும் இல்லை என்பது தெளிவாகிறது என்றும், மேற்படி சாட்சி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டதற்கான பதிவேடுகளும் நிலகுடியேற்ற சங்கம் சம்மந்தமாக எவ்வித ஆவணங்களும் இல்லை என்று கூறிய பின்னிட்டும் இந்த மனுதாரர் /வாதி, இவ்வழக்கை காலம் கடத்தும் நோக்கத்தில் மாவட்ட ஆட்சியரை விசாரணை செய்ய வேண்டும் என இம்மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றும், எனவே இம்மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என எதிருரை தாக்கல் செய்துள்ளார்.

2ம் எதிர்மனுதாரர் தனது தரப்பில் இம்மனுவை அனுமதிப்பதில் ஆட்சேபனை இல்லை என குறிப்புரை செய்துள்ளார்.

4. **தற்பொழுது இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், மனுதாரர் இம்மனுவில் கோரிய பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கதா? என்பதேயாகும்.**

5. இரு தரப்பு வாதமும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

6. மனுதாரர்/வாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வாதிடுகையில், கடந்த 1959-ம் ஆண்டு வாக்கில் சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம், இராமநாயக்கன்பாளையம் கிராமத்தில் நிலக்குடியேற்ற சங்கம் துவங்கப்பட்டு அச்சங்கத்தில் இணைந்த 66 உறுப்பினர்களுக்கு தலா 7-1/2 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டதாகவும், மனுதாரர்/வாதியும் மேற்படி சங்கத்தில் உறுப்பினர் என்ற முறையில் அவருக்கும் நிலம் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், அதன் பின்னிட்டு மேற்படி சங்கம் 1988ல்

களைக்கப்பட்டதால் சங்க உறுப்பினர்களிடம் ஒப்படைக்கப்பட்ட நிலங்களுக்கு உறுப்பினர்கள் அல்லது அவர்களது வாரிசுகளுக்கு அடமானம் வழங்க உத்தரவிடப்பட்டதாகவும், மேற்படி நிலக்குடியேற்ற சங்கம் சம்மந்தப்பட்ட ஆவணங்கள் இவ்வழக்கிற்கு இன்றியமையாத ஆவணங்கள் என்பதால் இம்மனுவை அனுமதிப்பது அவசியம் என்று வாதிட்டார்.

மாறாக எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வாதிடுகையில், ஏற்கனவே நிலக்குடியேற்ற கூட்டுறவு சங்க துணைப்பதிவாளரான ரவிசங்கர் தனது முதன்மை சாட்சியத்தில் தெளிவாக சங்கம் தொடர்பான மற்ற ஆவணங்கள் அவரது அலுவலகத்தில் கிடைக்கவில்லை என சாட்சியம் அளித்துள்ள நிலையிலும், மேற்படி சாட்சி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டதற்கான பதிவேடுகளும் கிடைக்கப்பெறவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளதாலும், மாவட்ட ஆட்சியரையோ அல்லது அவரது அதிகாரம் பெற்றவரையோ விசாரிப்பது இவ்வழக்கிற்கு அவசியமற்றது என்றும், எனவே மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் வாதிட்டார்.

வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்து பார்த்ததில் மனுதாரர்/ வாதியும் 1, 2 பிரதிவாதிகள்/எதிர்மனுதாரர்கள் சகோதர சகோதரிகள் என்பது தெரிய வருகிறது. கடந்த 1998ல் வாதி, 1, 2 பிரதிவாதிகளின் தகப்பனார் அங்கமுத்து அவரது சொத்துக்கள் குறித்து ஆவணங்கள் எதுவும் ஏற்படுத்தாமல் இறந்ததால் அவரது வாரிசுகளான வாதி, 1, 2 பிரதிவாதிகள் வழக்கு சொத்தை கூட்டாக அனுபவித்து வருகின்றனர். இந்நிலையில் தாவா சொத்து வாதி, 1, 2 பிரதிவாதிகளின் தகப்பனார் திரு.அங்கமுத்து என்பவருக்கு பாத்தியப்பட்டது என்பதை நிரூபிக்க வாதிக்கு போதிய வாய்ப்பு அளிக்க வேண்டியும் மேற்படி தாவா சொத்து தொடர்பான ஆவணங்கள் சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டுவிட்டதாக வா.சா.4 சாட்சியம் அளித்துள்ள நிலையில் மேற்படி ஆவணங்களை வாதி தரப்பில் தாக்கல் செய்ய இம்மனுவை அனுமதிப்பது நீதியின் நலனுக்கு உகந்தது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் இம்மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித இழப்பும் ஏற்படாது எனவும் இந்நீதிமன்றம் கருதுகிறது.

7. தீர்வு:

இறுதியாக இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் வரிவடிவில் எடுக்கப்பட்டு, கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2025–ஆம் ஆண்டு, ஜுன் திங்கள், 30–ம் நாள், திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

D JANSIRANI
Digitally signed by D JANSIRANI
Date: 2025.06.30 18:30:29 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**ஆத்தூர்.**

<u>மனுதாரர்/எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:</u>

இல்லை

D JANSIRANI
Digitally signed by D JANSIRANI
Date: 2025.06.30 18:30:40 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**ஆத்தூர்.**

**<u>கூ.மா.உ.நீ. ஆத்தூர்</u>**
அசல்/வரைவு/உத்தரவு
இ.ம.எண். 9/2025 இன்
அ.வ.எண்.36/2003
நாள் : 30.06.2025